'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

# நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் :XVII மே கி.பி. 2026 சான்று : 198



## மாண்புமிகு மானுடம்



அமைதியகம்



இராம்நாடு



அருள்சான்று நிலையம்



சாயல்குடி



அம்மாபேட்டை




பூதலூர்



சிவசங்கை

# புதிய பணியாளர்கள் பயிற்சி



காளையார்கோவல்



தஞ்சாவூர்



மாந்தை



திருமயம்



ஓரியூர்



திருமயம்

**பாசத்திற்குரிய உடனுழைக்கும் நற்செய்திப் பணிக் குடும்பமே,**

'நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை. நான் தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன் (யோவா 15 :16) என்ற இயேசு கிறிஸ்து ஆண்டவரின் கட்டளையை ஏற்று, நிலைத்திருக்க உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன், செபிக்கிறேன். புனித பவுலடியார்' ஒவ்வொருவரும் எந்நிலையில் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அந்நிலையிலேயே நிலைத்திருக்கட்டும் (1கொரி 7: 20) என்று தெளிவாகக் கூறுகிறார். நாம் அனைவரும் நற்செய்தி பணியாளர்களாக அழைக்கப்பட்டிருக்கிறோம். அதில் நிலைத்திருக்க வேண்டும்.

'நீங்கள் நம்பிக்கையில் நிலைத்திருக்கிறீர்களா? என உங்களையே சோதித்துப் பாருங்கள். உங்கள் நடத்தையை சீர்தூக்கிப் பாருங்கள். இயேசு கிறிஸ்து உங்களுள் செயலாற்றுகிறார் என உணராமலா இருக்கிறீர்கள்? நீங்கள் சீர்தூக்கி பார்த்தீர்கள் என்றால் அதை உணர்வீர்கள் (2 கொரி 13 :5) என்று புனித பவுலடியார் வினவுகிறார். நமது அர்ப்பணத்தில் எந்நிலையில் இருக்கிறோம் என்பதை திறந்த மனதோடு ஆய்வு செய்து, தெளிவான முடிவெடுக்கக் காலம் கனிந்திருக்கிறது. தன்னார்வ நற்செய்தி பணியாளர் இயக்கம், பணியாளரின் நற்செய்திப் பணி மற்றும் வாழ்வு பற்றிய ஆய்வு மற்றும் மறு அர்ப்பணம் என்ற செயல்பாட்டை முன்னெடுக்கவிருக்கிறது என்பதை சென்ற இதழிலேயே எழுதி இருந்தேன். அதற்கு முழுமையாக நம்மை தயாரிப்போம்.

'கனிவாழ்வு' என்ற தலைப்பிலே தூய ஆவியானவரின் பெருவிழாத் தயாரிப்பு நவநாள்களை அனுசரித்து, தூய ஆவியானவர் பெருவிழாவை மிகச் சிறப்பாக கொண்டாடி இருக்கிறோம். அதன் மூலமும் நம்மை சுய ஆய்வு செய்து இருக்கிறோம். தொடக்கத்திலிருந்து நீங்கள் கேட்டறிந்தது உங்களுள் நிலைத்திருக்கட்டும். தொடக்கத்தில் இருந்து நீங்கள் கேட்டறிந்தது உங்களுள் நிலைத்திருந்தால், நீங்கள் மகனுடனும் தந்தையுடனும் இணைந்து இருப்பீர்கள் (1யோவா 2:24) என்று புனித யோவான் தெளிவாகக் கூறுகிறார். தந்தையோடும் மகனோடும் இணையும் போது தூய ஆவியாரோடும் இணைந்திருப்போம் தானே! அது மட்டுமல்ல நீங்கள் அவரிடமிருந்து பெற்றுக் கொண்ட அருள்பொழிவு உங்களுள் நிலைத்திருக்கிறது. அதனால் உங்களுக்கு எவரும் கற்பிக்க வேண்டிய தேவை இல்லை. மாறாக நீங்கள் அவரிடமிருந்து பெற்றுக் கொண்ட அருள்பொழிவால் அனைத்தையும் கற்றுக் கொள்கிறீர்கள். அருள்பொழிவு உண்மையானது. பொய்யானது அல்ல. நீங்கள் கற்றுக் கொண்டதற்கேற்ப அவரோடு இணைந்து வாழுங்கள் (1 யோவா2: 27) என்று புனித யோவான் மிகத் தெளிவாகக் கூறிப்பிடுகிறார்.

அர்ப்பணம் ஏற்பதற்கு முன் 'தெளிந்து தேர்தல்' தியானம் போலவே ஆய்வுகள் நடத்தப்பட்டு மறு அர்ப்பணத்திற்கு தயாரிக்கும் நிகழ்வு நடப்பதற்கு முன்பாகவே சுய ஆய்வைத் தொடங்கிவிட அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அர்ப்பணிப்பு என்றால் என்ன என்பதை விளக்கியதுடன் திருவிவிலிய மாந்தரான ஆபிரகாமின் அர்ப்பண வாழ்வு பற்றியும் சென்ற இதழிலே எழுதி இருந்தேன். தொடர்ந்து திருவிவிலிய மாந்தர்களின் அர்ப்பணம் பற்றி எழுதவிருக்கிறேன்.

**இயேசுவின் தாய் அன்னை மரியாள்**

'இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர். அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்' என்று கபிரியேல் என்னும் வானதூதர் அன்னை மரியாளிடம் சொன்ன போது 'இது

எப்படி நிகழும்? நான் கன்னி ஆயிற்றே?' என்ற வினாவை தொடுத்த சற்று நேரத்தில் 'நான் ஆண்டவரின் அடிமை. உன் சொற்படியே எனக்கு நிகழட்டும்' என்று (லூக் 1: 31-38) தன்னை முற்றிலும் இறைத்திருவுளத்திற்கு அர்ப்பணித்தார். யூத மரபில் ஒரு கன்னிப் பெண்ணுக்கு இதை விட ஒரு கடினமான, கடுமையான, சகித்துக் கொள்ள முடியாத சோதனை இருக்க முடியுமா? ஆனாலும் அவருடைய முழுமையான அர்ப்பணிப்பு எந்த சூழ்நிலையையும் கடவுளுக்கு தன்னை அர்ப்பணிக்க முடியாத அளவுக்கு தடையாய் இருக்க முடியாது என்பதைக் கோடிட்டு காட்டுகிறது அல்லவா! நாம் நம்மை கடவுளுக்கு அர்ப்பணிக்க முடியாத படி தடையாய் இருப்பது என்ன? உலக மதிப்பீடுகள், பிற சமய மக்களின் மூட பழக்க வழக்கங்கள் மீதான பற்று, பணம், வசதி வாய்ப்புகள், கடவுள் என்ன நினைக்கிறார் என்பதை விட மனிதர்கள் என்ன சொல்லுவார்கள் என்ன நினைப்பார்கள் என்ற மனநிலை போன்றவை தானே!

'உலகின் மீதும் அதில் உள்ளவை மீதும் அன்பு செலுத்தாதீர்கள். அவ்வாறு அன்பு செலுத்துவரிடம் தந்தையின்பால் அன்பு இராது .ஏனெனில் உலக சார்ந்தவையான உடல் ஆசை, இச்சை நிறைந்த பார்வை, செல்வச் செருக்கு ஆகியவை தந்தையிடமிருந்து வருவன அல்ல. அவை உலகில் இருந்தே வருபவை. உலகம் மறைந்து போகிறது. அதன் தீய நாட்டங்களும் மறைந்து போகின்றன. ஆனால் கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுபவர் என்றும் நிலைத்திருப்பார்(1யோவா 2: 15 - 17) என்ற புனித யோவானின் ஆலோசனையைக் கேட்டு, அதன்படி நடந்தால் நமது அர்ப்பணத்தை எந்த தீய சக்தியும் தடுத்து விட முடியாது. இந்த மூன்றில் இயேசு ஆண்டவருக்குச் சோதனை வந்தபோது மிகத் தெளிவாகத் தனது அர்ப்பணத்தில் நிலைத்திருந்தார். யாரும் ,எதுவும் அவர் அர்ப்பணத்தில் கை வைக்க முடியவில்லை. நிறைய சாக்கு போக்குகளைச் சொல்லி பழகிவிட்டோம். சாக்கு போக்குகளை உருவாக்கி நமது கடமைகளைச் செய்ய, கடவுளின் மதிப்பீடுகளின் படி வாழ்ந்து அர்ப்பணத்தில் நிலைத்திருக்கத் தவறிவிடுகிறோம். மீண்டும் ஒருமுறை மே-கிபி 2026 இதழில் உள்ள எனது செய்தியை வாசிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். உண்மையிலேயே நமது கடமைகளில் சரியாக உண்மையாக இருந்தால் அர்ப்பணத்தில் நிலைத்திருப்பதில் எந்த ஒரு சவாலும் இல்லை. கடமைகளில் சரியாக இருப்பது போல் காட்டிக்கொண்டு, தந்திரமான முறையில் செயல்பட்டு மதிப்பீடுகளில் நிலைத்து நிற்கத் தவறுகிறோம், மறக்கிறோம். நம்மை நாம் ஏமாற்றிக் கொள்கிறோம் .அன்னை மரியாள் தன் வாழ்வின் இறுதி வரை அர்ப்பணத்தில் நிலைத்திருந்தார். அன்னைக்கு ஏற்பட்ட சவால்கள், துன்ப துயரங்கள் நாம் அறியாததா? அது எதுவும் அன்னையின் அர்ப்பணத்தைத் தகர்க்க அவர் இடமளிக்கவில்லை. நம்மை பணம்,வசதி வாய்ப்புகள், உலக காரியங்கள், மூடநம்பிக்கைகள் பெரும்பாலோவர் பின்பற்றுகிற ஊனியல்பு காரியங்கள் மிக எளிதாக திசை திருப்பி விடுகிறது. நம் இல்ல நல்ல துக்க நிகழ்வுகளில் மிக மிக எளிதாக கடவுளின் மதிப்பீடுகளை மீறி விடுகிறோமே? இது எப்படி? நம் அர்ப்பணம் எந்த நிலையில் இருக்கிறது? தன்னை ஆண்டவரின் அடிமை என்று அர்ப்பணித்த அன்னை இறுதிவரை நிலைத்திருந்தாரே! ஆண்டவருக்கு அடிமையாக நான் மாறினால் வேறு எதற்கும், எவருக்கும் அடிமையாக இருக்க வேண்டியதில்லையே!

அன்னை மரியாளின் அர்ப்பணிப்பு கடவுளின் திருவுளத்திற்கு முழுமையான கீழ்ப்படிதல் ஆகும்.இது தாழ்மை, நம்பிக்கை, தியாகம் ஆகியவற்றின் வெளிப்பாடு. ' நான் ஆண்டவரின் அடிமை.உம் வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்' என்று கூறிய வார்த்தை, தன் திட்டத்தை விட கடவுளின் திட்டத்தை ஏற்றுக் கொண்ட மனப்பான்மை. முழு நம்பிக்கையுடன் அர்ப்பணிப்பு. கீழ்ப்படிதல் தான் அதன் உச்சம் என்று சொல்லலாம். அவர் தன்னை ஆண்டவரின் தாய் என்று உயர்த்திக்

கொள்ளாமல் ஆண்டவரின் அடிமை என்றது அவரது தாழ்மையான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது. அவரது வாழ்க்கையில் ஒரு இடத்திலும்புகழைத் தேடாதது, அவரது பிறரன்பு சேவை, கடவுளுக்கு கீழ்ப்படிதல் அவரது அர்ப்பண வாழ்வின் எடுத்துக்காட்டுகள். இயேசு ஆண்டவரை வளர்ப்பதில் தாய்மையின் அர்ப்பணிப்பு விளங்குகிறது. அவரிடம் அவர் காட்டிய அக்கறை, எளிய சூழலிலும் குழந்தையை வளர்த்தது, எகிப்திற்கு தப்பிச்செல்லல், மகனின் வேதனைகளைத் தாங்கியது தாயின் அர்ப்பணிப்பு தானே! துன்பத்திலும் உறுதியான நம்பிக்கையோடு சிலுவை அடியில் நின்றவர் தானே நம் அன்னை. அச்சூழலிலும் கடவுளை விட்டு விலகவில்லை. நம்பிக்கையில் நிலைத்திருக்கும் அர்பணிப்பு துன்பத்தை தாங்கும் ஆவிக்குரிய வலிமையை தந்திருக்கிறது. திருத்தூதர்களுடன் இறைவேண்டலில் நிலைத்திருந்து கடவுளுடன் இடைவிடாத தொடர்பு கொண்டிருந்தது பணி வாழ்வு அர்ப்பணிப்பு தானே! எளிமையான குடும்ப வாழ்விலும் குடும்பப் பொறுப்புகளை அர்ப்பணம் உணர்வோடு வாழ்ந்து காட்டியவர் நம் அன்னை. எனவே நமது அர்ப்பணத்தை அன்னை மரியாளோடு ஒப்பிட்டு பார்த்து ஆய்வு செய்வோம். நாம் அர்ப்பண வாழ்வில் நிலைத்திருக்க ஒருவர் மற்றவருக்காக செபிப்போம்.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

**நற்பணி அ. சகாயராஜா**

## மே 2026 புதிய பணியாளர்கள் பயிற்சி

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - I பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 3.05.2026 அன்று நடைபெற்றது. 5 பேர் கலந்து கொண்ட . இப்பயிற்சியை நற்பணி J மேரிபுஷ்பம், நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - II காளையார்கோவில், தந்தை. ஜோசப் சேவியர் அரங்கில் 3.05.2026 அன்று நடைபெற்றது. 8 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி G. பிரான்சிஸ் சேவியர், நற்பணி P. சகாயராணி, ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - III தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 9.05.2026 அன்று நடைபெற்றது. 14 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி M. மரிய கிரகோரி, நற்பணி X. லூர்துமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IV இராமநாதபுரம், புனித செபமாலை அன்னை கோவிலில் 10.05.2026 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி G. ஜெனிபர், நற்பணி பெ. தெரசா மிரண்டா ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - V சிவகங்கை, வியான்னி அருள்பணி மையத்தில் 10.05.2026 அன்று நடைபெற்றது. 3 பேரும் கலந்து கொண்ட இப்பயிற்சியை M. சேவியர். நற்பணி. M. சகாயமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர் பயிற்சி - VI ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 10.05.2026 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி J.ஆரோக்கியசாமி, நற்பணி A. ஜான்சி மேரி.

நற்பணி இரா. அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VII அமைதியகம், காயாவயலில் 17.05.2026 அன்று நடைபெற்றது. 6 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை Sr. செலின் பிரபா, நற்பணி S.சகாயராணி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VIII சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை கோவிலில் 17.05.2026 அன்று நடைபெற்றது. 5 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி M. அருள் மரியநாயகம், நற்பணி J. சார்லஸ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - X சி.கே. மங்கலம், புனித பேதுரு கோவிலில் 17,05.2026 அன்று நடைபெற்றது. 4 பேர் கலந்து கொண்ட. இப்பயிற்சியை நற்பணி A. சகாயதமிழ் செல்வி, நற்பணி அம்பிகா எலியாஸ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.

சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IX இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் கோவிலில் 31.05.2026 அன்று நடைபெற்றது. 3 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி J. அருள் இளங்கோ, நற்பணி S. தைனஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

மே 2026

## கடந்த மாதச் செயல்பாடுகள்

✱06.05. 2026 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 26பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி செபஸ்தியான், நற்பணி அந்தோனி பிரகாஷ், நற்பணி இருதயமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

✱06.05. 2026 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் கூடுகை நடைபெற்றது. 65 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி லூர்து ஜான்போஸ்கோ, நற்பணி சகாயமேரி, நற்பணி தைனேஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✱09.05.2026 அன்று மாந்தை திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. அந்தோனி பிரகாஷ், நற்பணி. A. ஆரோக்கியசாமி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✱10.05. 2026 அன்று புதுக்கோட்டை திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி G.M.S. ராணி. நற்பணி A. சத்தியேந்திரன் ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✱10.05.2026 அன்று பூதலூர், புனித மரியன்னை கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S.மோட்ச அலங்காரம், நற்பணி L. ஆரோக்கியசாமி ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✱10.05.2026 அன்று பட்டுக்கோட்டை, உலக இரட்சகர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A. சகாயராஜா, நற்பணி S. சகாயராணி ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✱16.05.2026 அன்று மங்களபுரம், புனித லூர்துமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A.R.சூசைராஜ். நற்பணி A. ஆரோக்கியசாமி ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✱16.05.2026 அன்று திருமயம், புனித அடைக்கலமாதா கோவிலில் புதிய

பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை S. மோட்ச அலங்காரம், நற்பணி A. சத்தியேந்திரன், நற்பணி J. அருள் இளங்கோ. நற்பணி S. அந்தோனி பிரகாஷ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸17.05.2026 அன்று தஞ்சாவூர், திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை செயலர், நற்பணி S.பால்ராஜ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸17.05.2026 அன்று அம்மாபேட்டை, புனித லூர்துமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி J. ஆரோக்கியசாமி, நற்பணி M. விசுவாசம் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸23.05.2026 அன்று தூய ஆவியார் பெருவிழா 'முத்திரை' என்ற மைய சிந்தனையில் தேவகோட்டை ரஸ்தா ஆனந்தா அருங்கொடை மையத்தில் இரவு 9.00 மணிக்கு தொடங்கி அதிகாலை 4.30 மணிவரை திருவிழிப்பு நிகழ்வு நடைபெற்றது. இதில் அனைத்து பணியாளர்களும் பங்கேற்று அர்ப்பணத்தை புதுப்பித்துக்கொண்டார்கள். அருள்பணியாளர்கள் அலெச்சாண்டர், அந்தோணி செழியன், மற்றும் நற்பணி சகாயராஜா ஆகியோர் செய்திகள் வழங்கி நெறிப்படுத்தினார்கள். ஆவியானவரின் அருள்பொழிவு மற்றும் திருப்பலியோடு திருவிழிப்பு நிறைவுற்றது.

✸30.05. 2026 அன்று தங்கச்சி. மடம் மையத்தில் அறிமுகப் பயிற்சி நடைபெற்றது.


✸31.05.2026 அன்று அமைதியகம், சி.கே.மங்கலம், ஓரியூர், ஆர்.எஸ். மங்கலம், அருள்சான்று நிலையம், சிவகங்கை. சாயல்குடி, காளையார்கோவில், இராமநாதபுரம் மையங்களில் அறிமுகப் பயிற்சி நடைபெற்றது.

✸31.05.2026 அன்று திருவாரூர், புனித பாத்திமா அன்னை கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S.மோட்ச அலங்காரம், நற்பணி A. ஆரோக்கியசாமி ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸31.05.2026 அன்று நமணசமுத்திரம், குழந்தை இயேசு கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A.யூஜின் அமல்ராஜ், நற்பணி, சேசுராஜ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸31.05. 2026 அன்று கோட்டைக்காடு புனித சூசையப்பர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S.பால்ராஜ், நற்பணி. A.R.சூசைராஜ் ஆகியோர் வழிநடத்தினர்கள்.

## ஒரு பணியளாரின் மன்றாட்டு



உமது நீதிநெறிகளைக் கவனமாய்ச் செயல்படுத்த எம்மைத் தூய ஆவியாரால் அருள் பொழிவு செய்தவரே இறைவா (எசே 36:27). ஆவியானவர் விழாக் கொண்டாடி மகிழ்ந்திருக்கிற நாங்கள், நீர் எம்மோடு இணைந்திருக்கிறீர் என்பதை அறிந்து கொள்ளவும் (1 யோ 3:24), எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட நல்ல போதனையைக் காத்துக் கொள்ளவும் அவர் உதவி செய்கிறார் என்பதையும் புரிந்து அதன்படி (2 திமொ 1:14) வாழ்ந்திட அருள் தாரும்.

இஸ்ரயேல் என் மகன் என் தலைப்பிள்ளை (விப 4:22)

இஸ்ரயேல் மக்களை எகிப்திலிருந்து விடுவிக்கும்படி கடவுள் மோசேயை அழைக்கும்போது எகிப்தில் என் மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன் என்றார் (விப 3:7). அதே மோசேயை பார்வோனிடம் அனுப்பும்போது முதலில் என் மக்கள் என்று பன்மையில் கூறியவர் இப்போது ஒருமையில் இஸ்ரயேல் என் மகன் என்றார் (விப 4:22-23). இஸ்ரயேல் மக்கள் எகிப்திலிருந்து புறப்பட்ட நாளிலிருந்து கானான் நாடு போய் சேர்வதற்குள் வழியில் எத்தனையோ போராட்டம் கடவுள் அந்த மக்களின் முணுமுணுப்பைக் கண்டு கோப்படுவதும் பின்பு மோசேயின் பரிந்துரையைக் கேட்டு மனதை மாற்றிக் கொள்வதுமாக இருந்தது. ஒரு முறை கடவுள் அவர்களுக்குக் கொடுக்க இருந்த நாட்டைப் பற்றி அவர்கள் முன்னமே அதை அறிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக அந்த நாட்டை உளவு பார்ப்பதற்காக சிலரை மோசே அந்த நாட்டிற்குள் அனுப்பினார். அனுப்பப்பட்டவர்கள் சாதாரண ஆட்கள் அல்ல. அவர்கள் இஸ்ரயேல் மக்களின் மூதாதையர் குலங்களின் தலைவர்கள் (எண் 13:22). அவர்கள் நாட்டை உளவு பார்க்கச்சென்று பின் திரும்பி வந்து நாட்டைப் பற்றி தவறான அறிக்கையைக் கொண்டு வந்தனர். இவ்வாறு மக்கள் கூட்டமைப்பு முழுவதும் ஆண்டவருக்கு எதிராக முணுமுணுக்கச் செய்தனர். அதாவது, நாட்டைப் பற்றித் தவறான அறிக்கை கொண்டு வந்ததால் வாதை நோயால் பலர் மாண்டனர் (எண் 14:36-37). ஆண்டவர் இஸ்ரயேல் மக்கள் மீது எவ்வளவு சினம் கொண்டாலும் அவர்களை முற்றிலும் அழித்துவிடவில்லை. ஏனென்றால் தொடக்க நூலில் (3:15) சொல்லப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றக் கூடிய உலக மீட்பர் இந்த இஸ்ரயேலிடமிருந்து தான் வரவேண்டும், எனவே தான் நம் ஆண்டவர் யூதரிடமிருந்து மீட்பு வருகிறது என்று கூறினார் (யோவா 4:22). ஆகவேதான் அந்த மக்களை முற்றிலும் அழிக்காமல் விட்டு வைத்தார். இதை இறைவாக்கினர் ஏசாயா கூறும்போது படைகளின் ஆண்டவர் நம்மில் சிலரையேனும் எஞ்சியிருக்கச் செய்யாவிடில் சோதோமைப் போல் நாம் ஆகியிருப்போம், கோமோராவுக்கு ஒத்தவர்களாயிருப்போம் என்று மிகவும் வேதனையோடு கூறுகிறார் (ஏசா 1:9). இஸ்ரயேலை என் மகன் என்று ஆண்டவர் கூறுவது (விப 4:22-23) இயேசு ஆண்டவரைத் தலைப் பிள்ளையாகவும் அவர் மீது நம்பிக்கை கொள்ளும் நம் ஒவ்வொருவரையும் அவருக்கடுத்த பிள்ளைகளாவும் நம்மை முன் குறித்துவிட்டார். இதை புனித பவுல் குறிப்பிடும்போது நாம் தூயோராகவும் மாசற்றோராகவும் தம் திருமுன் விளங்கும்படி உலகம் தோன்றுவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாக தேர்தெடுத்தார் (எபே 1:4) என்று மிகவும் உறுதிபடக் கூறுகிறார். இது கடவுள் நமக்காக எத்தனை மாபெரும் கொடை என்பதை எண்ணிப் பார்ப்போம். நம்மை ஏன் கடவுள் அவ்வாறு தேர்ந்தொடுத்தார்? கடவுள் ஆதாமைப் படைத்தபோது அவரது உருவிலும் அவரது சாயலிலும் உண்டாக்கினார் (தொநூ 1:26). ஆனால் பாவம் செய்தபோது ஆதாம் அதே சாயலை இழந்து போனான். ஆனால் கடவுள் நம்மீது கொண்ட அன்பும் ஆசையும் குறையவில்லை. இழந்த என் சாயலை என் மகன் வழியாக மீண்டும் மனிதனுக்கு வழாங்கி அழகு பார்க்க வேண்டும் என்பதே கடவுளின் பேரார்வம். அதற்காகத் தான் தன் ஒரே மகனை சிலுவையில் கதறக் கதற

கைவிட்டார். தம்மால் முன்பே தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் தம் மகனின் சாயலுக்கு ஏற்றவாறு இருக்கவேண்டுமெனக் கடவுள் முன் குறித்து வைத்தார். இது எத்தனை அற்புதமான செயல் என்று பவுல் குறிப்பிடுகிறார் (உரோ 8:29). நாம் எத்துணை பேறு பெற்றவர்கள் என்று எண்ணிப் பார்ப்போம், எனவே தான் அவர் தோன்றும் போது நாமும் அவரைப்போல இருப்போம் என்று புனித யோவான் குறிப்பிடுகிறார் (1யோ3:2). இஸ்ரயேலரை அழைக்கும்போது கடவுள் நம் ஒவ்வொருவரையும் தம் மனதில் நினைத்து இஸ்ரயேல் என் மகன் என் தலைப்பிள்ளை என்றார் (விப 4:22-23). புதிய ஏற்பாட்டில் எவ்வாறு வார்த்தை மனுவுருவானாரோ அதுபோலவே நாமும் கடவுளின் வார்த்தையால் அவரது பிள்ளைகளாகப் பிறக்கிறோம். புனித யாக்கோபு கூறுவதைக் கவனிப்போம். தம் படைப்புகளுள் நாம் முதற்கனிகளாகும்படி உண்மையை அறிவிக்கும் வார்த்தையால் நம்மை ஈன்றெடுக்க அவர் விரும்பினார் (யாக் 1:18). இதை புனித பேதுரு குறிப்பிடும்போது நீங்கள் அழியக் கூடிய விதத்தினால் அல்ல. மாறாக உயிருள்ளதும் நிலைத்திருப்பதுமான அழியா வித்தாகிய கடவுளின் வார்த்தையால் புதுப்பிறப்பு அடைந்துள்ளீர்கள் என்கிறார் (1 பேது 1:23). இதைத் தன் பணி வாழ்வில் நன்கு உணர்ந்த பவுல் தாயின் வயிற்றில் இருந்தபோதே என்னைத் தமக்கென ஒதுக்கி வைத்துத் தமது அருளால் என்னை அழைத்த கடவுள் என்று குறிப்பிடுகிறார் (கலா 1:15). மேலும் இதன் பொருட்டே தான் இவ்வாறு துன்பற்று வருகிறேன் என்றும், வெட்கமுறுவதில்லை என்றும் கூறி தொடர்ந்து ஏனெனில் நான் யாரிடம் நம்பிக்கைக் கொண்டுள்ளேன் என அறிவேன் என்கிறார் (2திமொ 1:12). இதே நிலையில் தான் நம்மையும் அழைத்திருக்கிறார். நாம் கடவுளின் பிள்ளைகள் என்பதை உணர்வோம். ஏனென்றால் கடவுள் நம்மை அவரது பிள்ளைகளைகாத் தேர்ந்து கொண்டார். கடவுள் தேர்ந்து கொண்டவர்களுக்கு எதிராய் யார் குற்றம் சாட்ட இயலும். அவர்கள் குற்றமற்றவர்களாகக் காட்டுபவர் கடவுளே. அவர்களுக்கு யார் தண்டனைத் தீர்ப்பு அளிக்க இயலும்? இறந்து உயிருடன் எழுப்பப்பட்டுக் கடவுளின் வலப்பக்கத்தில் இருக்கும் கிறிஸ்து இயேசு நமக்காகப் பரிந்து பேசுகிறார் (உரோ 8:33-34). நம்மை அவரது பிள்ளைகளாக தேர்ந்து கொண்டது மட்டுமல்ல. நமக்கு எத்தைனை பாதுகாப்பு அளித்துள்ளார் என்பதையும் எண்ணிப் பார்ப்போம். நன்றி நிறைந்த உள்ளத்தோடு அவரது பணியை இன்னும் ஆர்வமாய் எப்போதும் செய்ய ஆர்வம் கொள்வோம். நாம் கடவுளின் பிள்ளைகளாய் இருப்பதால் அவர் வாழ்ந்தவாறே நாமும் வாழக் கடமைப்பட்டவர்கள் என்று யோவான் குறிப்பிடுவது நம் அனைவர்க்கும்

| வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும் | |
|---|---|
| மனமார ஆண்டவர் மானிடரை வருத்துவதுமில்லை; துன்புறுத்துவதுமில்லை. | **புலம்பல்** 3:33 |

**நற்செய்திப் பணிக்குழுவின் இணைய தளம்** www.arulchandrunilayam.org

**யோசேப்பிற்கு வந்த துன்பம்:**

கடவுளின் பார்வையில் யோசேப்பு உண்மையும் உத்தமுமாய் வாழ்ந்த ஒரு நேர்மையாளர். ஆனால், அவருடைய சொந்த சகோதர்களால் அநியாயமாக துன்புறுத்தப்பட்டு அந்நிய நாட்டிற்கு அடிமையாகக் கொண்டு போகப்பட்டார். அதை, இறைவன் தடுக்கவில்லை. நீதியை அநீதி வென்றது போன்ற ஒரு சூழ்நிலை ஏற்ப்பட்டது. யோசேப்பின் சகோதரர்களின் திட்டம் அவருக்கு எதிரான தீமையான திட்டம்தான் ஆயினும் அந்தத் தீமையான திட்டத்தின் வழியாக யோசேப்பை ஆசீர்வதித்து எகிப்தின் ஆளுனராக உயர்த்துவது கடவுளின் திட்டமாக இருந்தது. கடவுளிடம் அன்பு கூர்பவர்களோடு, அதாவது அவரது திட்டத்திற்கேற்ப அழைக்கப்பட்டவர்களோடு, அவர்கள் நன்மைக்காகவே ஆவியார் அனைத்திலும் ஒத்துழைக்கிறார்(உரோ8:28) என்ற இறைவனின் விதியே அங்கு செயல்பட்டது.

தீய மனிதர்களால் வரும் துன்பங்கள் சிலுவையாக நம்மை அழுத்தி வேதனைப்படுத்துகின்ற நேரங்களில் இறைவன் அவற்றை தடுக்காமல் அனுமதித்திருக்கலாம். ஆயினும், இவைகள் மேலான நோக்கத்தோடுதான் இறைவனால் அனுமதிக்கப்படுகின்றன. ஆகவே. அநீதியான சிலுவைகளை நாம் எதிர்த்து நிற்காமல் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாகிக் கொண்டால். அவைகள் பல நன்மையான விளைவுகளைக் கொண்டுவரும்.

**தாவீதுக்கு வந்த துன்பம்:**

தாவீது, சவுல் அரசருக்கு எதிராக எந்த குற்றமும் செய்யாத போதும், சவுல் அரசர், தாவீதின் உயிரைப் பறிக்க வகை தேடிக்கொண்டிருந்தார். ஆனால், சவுலின் உயிரைப் பறிக்கத் தாவீதுக்கு ஏராளமான காரணங்களும் வாய்ப்புகளும் இருந்தன. சவுலைக் கொன்று ஆட்சியைப் பிடிக்க பல வாய்ப்புகள் இருந்தபோதும், தாவீது அவைகளைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை (1சாமு24:6,7). சவுலின் உயிரை எடுக்க ஏராளமான காரணங்கள் உண்டு. ஆனால், சவுலின் அநீதியைப் பொறுத்துக்கொள்ள ஒரே ஒரு காரணம்தான் இருந்தது. அதாவது, சவுலை எதிர்த்துப் பதிலுக்குப் பதில் செய்வது இறைவனுக்கு மகிமையைக் கொண்டுவராது என்பது மட்டுமே. ஆகவே, கடவுளுடைய உணர்வுகளுக்கும் அவருடைய மேன்மையான விருப்பத்திற்கும் முரண்படாமல் கடவுளுக்கு பணிந்து, தீமையை எதிர்ப்பதற்குப் பதிலாகத் தீமையைப் பொறுத்துக்கொண்டார். தீமைக்குப் பதில் தீமை செய்வது கடவுளுக்கும் உகந்ததல்ல (உரோ12:7) என்ற உணர்வோடுதான் சவுல் அரசரால் வந்த தீமைகளை தனக்கு கடவுளால் அனுமதிக்கப்பட்ட சிலுவையாக ஏற்றுக்கொண்டு அதனைப் பொறுத்துக்கொண்டார்.

தற்காலிகமாக பல கஷ்டங்களும், நஷ்டங்களும் ஏற்படலாம். ஆனால், நீதியுள்ள இறைவன் ஒரு நாள் நீதி வழங்க எழும்புவார். இன்று நாம் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கும், நஷ்டங்களுக்கும் கைமாறாக பல மடங்கு பலன்களை நிச்சயம் அருள்வார். ஏனெனில், நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர் ஏனெனில், விண்ணரசு அவர்களுக்குரியது (மத்5:10) என்கிறார்

**சிலுவையை ஏற்க வேண்டுமா?**

அப்படியானால், தீய மனிதர்களால் வரும் எல்லாத் தீய செயல்களையும் பொறுத்துக்கொள்ள வேண்டுமா? என்ற கேள்வி எழும்பலாம். எல்லா தீய செயல்களையும் பொறுத்துக்கொண்டு மௌனமாக வேடிக்கை பார்ப்பது என்பது சரியான கருத்து அல்ல. அநீதியையும் அக்கிரமங்களையும் நியாயமான வழிகளில் எதிர்ப்பது அவசியமே. ஆனால், ஒரு அநீதியை எதிர்க்க இன்னொரு அநீதியான அனுகுமுறையை கடைபிடிப்பதுதான் தவறு. அது கடவுளுக்கு ஏற்றதல்ல. நீதியான

வழியில் நின்று அநீதியை எதிர்க்க வாய்பில்லாமல் போகும்போது. அந்த அநியாயத்தை ஒரு சிலுவையாக ஏற்று சுமப்பதே இறைவனுக்கு மகிமை சேர்ப்பதாகும்.

**இயேசு ஏற்றுக் கொண்ட துன்பம்**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பாவமே அறியாதவர், எந்த குற்றமும் செய்யவில்லை. எங்கும் நன்மை செய்துகொண்டே சென்றார். ஆனால், அவர் குற்றவாளியாகத் தீர்ப்பிடப்பட்டு சிலுவையிலே அறையப்பட்டார். இயேசு வேறு வழியின்றி சிலுவையை ஏற்கவில்லை. அதை தவிர்க்கவும் எதிர்க்கவும் - எல்லா அதிகாரமும் வல்லமையும் இருந்தது. ஆனாலும், தாமாக முன்வந்து சிலுவையை ஏற்றுக்கொண்டார். மனித அநீதியின் விளைவாக வந்தது சிலுவை. ஆனால், அதன் மூலம் இறைநீதி நிறைவேற வழி இருந்ததால் அவர் அதனை ஏற்றுக்கொண்டார். அவர் தன்னை நியாயப்படுத்தி சமரச வாழ்க்கை வாழவிரும்பவில்லை. மாறாக, மனித குலத்தின் பாவங்களுக்குப் பரிகாரம் செய்ய விரும்பி, தன்னை முழுவதும் தந்தையின் திருவுளத்திற்குப் பணிந்து அர்ப்பணித்தார். மனித குலம் பாவங்களிலிருந்து மீட்கப்படுகிறது என்ற மகிழ்ச்சியின் பொருட்டு இழிவையும் பொருட்படுத்தாமல் சிலுவையை ஏற்றுக்கொண்டார் (எபி12:2). இந்த தெய்வீக விதியின்படி சில நேரங்களில் நேர்மையாளர்களுக்கு இந்த உலகம் தருகின்ற அநீதியான சிலுவையை சுமப்பதற்கு இறைவன் அனுமதிக்கிறார்.

மனிதனின் கோபம், பொறாமை, வெறுப்பு. நேர்மையற்ற மனநிலை ஆகியவற்றின் விளைவாக பல நேரங்களில் சிலுவையைச் சுமக்க நேரிடும் அந்த நேரங்களில் எனக்கு ஏன் இந்த துன்பம் என்று இறைவனை கேள்வி கேட்க ஆரம்பித்துவிடுகிறோம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நேர்மையற்றவர்களை இறைவன் தண்டிக்காமல் இருக்கிறார் என்று நினைக்கிறோம். இப்படிப்பட்ட துன்பங்கள் விண்ணிலிருந்து வந்தவை அல்ல. அவைகள் இந்த உலகம் தந்தவை. ஆனால், அவைகளின் மூலம் இறைவன் தம்முடைய திட்டத்தை நிறைவேற்றவும், நமக்கு மேண்மையானதொரு நன்மையைச் செய்யவும் வாய்ப்பு உருவாக்குகின்றார். ஆகவே. தெய்வீக நோக்கங்களுக்காக இறைவன் நமக்குத் துன்பங்களை அனுமதிக்கிறார்.

**தெய்வீக நோக்கத்திற்க்காக துன்பங்களை பொறுத்துக்கொள்ளுங்கள்**

தீமைக்கு தீமை செய்யாமல், அதைப் பொறுத்துக்கொண்டு கடவுளை மகிமைப் படுத்திய தாவீதை, ஏற்ற வேளையில் அரியணையில் அமர்த்தி, தம்முடைய நீதியை கடவுள் வெளிப்படுத்தினார். தாவீது தாங்கிக் கொண்ட சிலுவை அவரை அரியணைக்கு நேராய் கொண்டுசென்றது. 'உம் நேர்மையை கதிரொளி போலும், உன் நாணயத்தை நண்பகல் போலும் அவர் விளங்கச் செய்வார்' (திபா 37:6) பாவிகளால் தமக்கு உண்டான எந்த எதிர்ப்பையும் மன உறுதியோடு தாங்கிக்கொண்ட அவரை எண்ணிப்பாருங்கள். அப்போது நீங்கள் மனம் சோர்ந்து தளர்ந்து போகமாட்டீர்கள். பாவத்திற்கு எதிரான போராட்டத்தில், இரத்தம் சிந்தும் அளவுக்கு நீங்கள், இன்னும் எதிர்த்து நிற்கவில்லை (எபி12:3,4). ஆகவே, இவ்வுலகப் போக்கின்படி சமரச வாழ்க்கை வாழாமல் இயேசுகிறிஸ்துவோடு இணைந்து பாடுகளைப் பொறுத்துக் கொண்டால் அவரோடு ஆளுகை செய்வது நிச்சயம். ஏனெனில், சிறந்த நிலையான உடைமைகள் நமக்கு உண்டு (எபி10:32-34). ஆகவே. நாமும் அவருக்கு ஏற்பட்ட இகழ்ச்சியில் பங்கு கொண்டு பாளையத்தைவிட்டு வெளியேறி அவரிடம் செல்வோம். ஏனெனில், நிலையான நகர் நமக்கு இங்கு இல்லை. வரப்போகும் நகரையே நாம் நாடிச் செல்கிறோம் (எபி 13:13,14). கடவுள் நம்பிக்கைக்குரியவர் அவர் உங்களுடைய வலிமைக்கு மேல் நீங்கள் சோதனைக்குள்ளாக விடமாட்டார். சோதனை வரும்போது அதை தாங்கிக்கொள்ளும் வலிமையை உங்களுக்கு அருள்வார் அதிலிருந்து விடுபட வழி செய்வார் (1கொரி 10:13).

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**

'எந்நிலையிலும் நம்பிக்கை என்னும் கேடயத்தை பிடித்துக் கொள்ளுங்கள், அதைக் கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அணைத்து விட முடியும்'(எபே6:16)

இறை நம்பிக்கையென்பது நம் ஆவிக்குரிய போராட்டத்தில் அலகையின் தீக்கணைகயாகிய அவநம்பிக்கையிலிருந்து நம்மை காத்துக் கொள்ளக் கேடயமாக இருக்கின்றது. நலிந்து போனவர்களை ஊக்குவித்து உயிரோட்டமாக வைத்திருப்பது நம்பிக்கைதான்.

'நீங்கள் கிறிஸ்துவோடு உயிர்பெற்று எழுந்தவர்களானால் மேலுலகு சார்ந்தவற்றையே நாடுங்கள் அங்கே கிறிஸ்து கடவுளின் வலப்பக்கத்தில் அமர்ந்திருக்கிறார்.'(கொலோ3:1). ஆண்டவர் இயேசுவோடு இணைந்த நிலையில் உயிர் பெற்றவர்களாய் வாழ்ந்து வருகின்றோம். ஆண்டவர் இயேசு தந்தையின் வலப்பக்கத்தில் அமர்ந்திருக்கிறார் என்று நம்புகின்றோம். அதனையே தினமும் அறிக்கை செய்கின்றோம். அப்படி நம்புகின்ற நம்முடைய இவ்வுலக வாழ்வு இவ்வுலகைச் சார்ந்ததாக இல்லாமல் மேலுலகைச் சார்ந்தவையாக இருக்க வேண்டும் என்று புனித பவுல் அறிவுறுத்துகின்றார். கிறிஸ்து இறந்து உயிர் பெற்று தந்தையின் வலப்பக்கம் அமர்ந்துள்ளார் என்று உள்ளூர நம்பி, அறிக்கை செய்கின்ற நம்முடைய சிந்தனை, சொல், செயல் அனைத்தும் மேலுலகைச் சார்ந்தவை பற்றி இருக்கின்றதா? இருக்கின்றது என்றால் இறைவனுக்கு நன்றி சொல்வோம். இல்லை என்றால் உலக வாழ்வில் வெறுமையை நிலையாமையைப் புரிந்து கொண்டு மேலுலகு சார்ந்தவற்றை நாடிப் பயணிக்க முயற்சி செய்வோம். யாரை நாம் நம்பி இருக்கின்றோமோ அவர் நம்மை நம்பிக்கை வாழ்வில் வெற்றி வாகை சூட அழைத்துச் செல்வார்.

இந்த ஜூன் மாதம் முழுவதும் இயேசு கிறிஸ்துவின் இதயத்தில் இருந்து ஊற்றாய் பெருக்கெடுத்து வழிந்தோடி தம்மை உண்மையாய் நம்புகின்றவர்களின் இதயத்தில் ஊற்றப்படும் அவரது அன்பைப் பற்றி தியானிக்கிறோம். இயேசுவின் விலைமதிப்பற்ற அன்பைப் பெற வேண்டும் என்று யாரெல்லாம் ஆசைப்படுகின்றோமோ அவர்களுக்கு ஆண்டவர் தம் அன்பையும் இரக்கத்தையும் பொழிவதில் பாராபட்சம் காட்டுவதில்லை.

இறையன்பைப் புரிந்து கொள்ளவும் அதனால் ஆற்றலும் வலிமையும் பெற்றுக் கொள்ளவும் நமக்குத் தேவையான ஒன்றே ஒன்று இறை நம்பிக்கைதான். இறை நம்பிக்கையில் நம்மை உறுதிப்படுத்துவது இறைவாத்தையும் நாம் அவரோடு தனித்திருக்கும் நேரமும்தான். இறை வார்த்தையை வாசித்து அவற்றைத் தியானிப்பதன் மூலம் தூய ஆவியானவர் வழியாக இறை நம்பிக்கையில் நாம் உறுதி பெறுகின்றோம்.

'தொடக்கத்தில் நாம் கொண்டிருந்த இறை நம்பிக்கையை இறுதிவரை

உறுதியாகப் பற்றி கொண்டிருந்தால் நாமும் கிறிஸ்துவின் பங்காளிகளாவோம்.....(எபி3:14) நாம் நற்செய்திப் பணியாளர்களாக அர்ப்பணம் பெற்ற நாளை எண்ணிப் பார்ப்போம் .எப்படிப்பட்ட நம்பிக்கையோடு இருந்தோம். என்னென்ன தீர்மானங்கள் எடுத்தோம். எப்படியெல்லாம் வாழ வேண்டும் என்று முடிவு செய்தோம். அர்ப்பணம் ஏற்ற பொழுது நமக்குள் இருந்த ஆர்வமும் நம்பிக்கையும் இறைவாக்குகளின் மீது கொண்டிருந்த தாகமும்தான் நம் தொடக்கமாக இருந்தது. அப்படித் தொடக்கமாக இருந்த நம்பிக்கையை இறுதிவரை இவ்வுலகை விட்டுப் போகும் வரை காத்துக் கொள்ள நமக்கு போராட்டங்கள் உண்டு. அவற்றையெல்லாம் தாண்டி நம்பிக்கையில் உறுதியோடு இருந்தால் தான் நாம் கிறிஸ்துவின் பங்காளிகளாவோம்.

பங்காளிகள் என்றால் அவருடையது எல்லாம் நம்முடையதே. ஆண்டவர் இயேசு 'தந்தையுடைய யாவும் என்னுடையவையே'(யோவா16:25) தந்தையுடையது அனைத்தும் இயேசு ஆண்டவருக்குரியது. இயேசு ஆண்டவருக்கு ரியவை அனைத்தும் அவருடைய பங்காளிகளான நமக்கும் உரியவை. அதனால் தான் இயேசு ஆண்டவர் 'நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதை எல்லாம் அவர் உங்களுக்குத் தருவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.'(யோவா16:23) என்று அவர் மீது நம்பிக்கை கொண்டிருக்கும் அனைவரும் இயேசுவின் பெயரால் கேட்பதை யெல்லாம் தந்தையிடமிருந்து பெற்றுக் கொள்ளும் உரிமையை நமக்கு தந்திருக்கிறார்.

'தந்தையே உலகம் தோன்றும் முன்பே நீர் என் மீது அன்பு கொண்டு எனக்கு மாட்சி அளித்தீர் நீர் என்னிடம் ஒப்படைத்தவர்கள் என் மாட்சியைக் காணுமாறு அவர்களும் நான் இருக்கும் இடத்திலேயே என்னோடு இருக்க வேண்டும் என விரும்புகிறேன்.'(யோவா17:24) ஆண்டவர் இயேசுவின் மீது நம்பிக்கை கொண்டு அவரது பங்காளிகளாக உரிமைப்பேறு பெற்றிருக்கிற நாம் அவர் இருக்கும் இடத்தில் அவரோடு இருக்க வேண்டும் என்று விரும்புகின்றார். நாம் அவர் மீது கொள்ளும் நம்பிக்கை இறுதி நாளில் அவர் இருக்கும் இடத்தில் நம்மைக் கொண்டு போய்ச் சேர்க்கும்.

நற்பணி **ச.சகாயராணி,** இராம்நகர்.

**இப்ப இல்லாட்டி எப்ப ?**

கடவுளிடம் நம்மைஇணைக்கும்
கடவுச்சொல் (**Password**)தான் **செபம்.**


-எல்லாரோ

**இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?**

நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; உங்கள் முழு இதயத்தோடும்
என்னைத் தேடும்பொழுது நீங்கள் என்னைக் கண்டடைவீர்கள்.
எரே 29:13

# பணியாளர் குறுக்கெழுத்துப் போட்டி (02)

**மே** மாத நற்செய்திப் பணியாளர் செய்தி மடலில் (தூய ஆவியாரால் முத்திரையிடப்பட்ட) இருந்து மட்டுமே கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன.




**இடமிருந்து வலம்**

1 யாருக்கு துயரம் வருவிக்காதீர்கள்?

3 நான் மன்றாடினேன் _________ எனக்குக் கொடுக்கப்பட்டது

5 புனித யாக்கோபு செயல்கள் தான் நாம் கொண்டுள்ள நம்பிக்கைக்கு எது என்கிறார்?

6 இயேசுவுக்கான எதை நிறைவேற்றியே ஆகவேண்டும்?

7 எந்த நாட்டில் இருந்த போது கடவுள் மொழிப்பிளவை ஏற்படுத்தினார்?

8 இன்று எதாவது _________ செய்தீர்களா?

10 புனித பவுல் எதை முன்னிட்டு வெட்கப்பட மாட்டேன் என்கிறார்?

13 இயேசுவின் வழியில் நடப்போர் எந்த நிலைவாழ்வைப் பெறுவர்?

15 எதிர்கொள்ளுதல் என்பது ஒரு _________ போன்றது.

**மேலிருந்து கீழ்**

2 எது என்றும் நம் கையில்

4 விண்ணரசின் வாழ்வு நமக்கு அருளப்பட்டுள்ளதால் நாம் என்ன செய்ய வேண்டும்?

9 மகனும் தாம் விரும்பியவர்களை _________ வைக்கிறார்

11 முதலில் உன்னிடம் விளங்கிய எது இப்போது இல்லை?

12 அன்பை பெற்றுக்கொள்ளும் வாசலாக யார் இருக்கிறார்?

14 கிறிஸ்துதான் திருச்சட்டத்தின் _________

**போட்டி விதிமுறைகள்**

1. ஒவ்வொரு மாதமும் 15 ம் தேதிக்குள் விடைகள் வந்து சேர வேண்டும்
2. குறுக்கெழுத்து கட்டங்கள் நிரப்பப்படுவதோடு போன மாத பணியாளர் இதழில் நீங்கள் கண்டுபிடிக்கும் வார்த்தை இருக்கும் சரியான பக்க எண் குறிப்பிடப்படவேண்டும்
3. விடை குறித்து சகோதரரின் முடிவே இறுதியானது
4. பரிசுத்தொகை ரூ 500/-. நிறைய பேர் சரியான எழுதியிருந்தால், குலுக்கலின் மூலம் ஒரு நபருக்கு பரிசுத்தொகை வழங்கப்படும்.

சென்ற மாத போட்டியில் கலந்து கொண்டவர்கள் 17 பேர். சரியான விடை எழுதியோர்: நற்பணி அலங்கார மேரி, இராம்நகர், நற்பணி தைனிஸ, இராம்நகர். நற்பணி மரியகிரகோரி, ஓ.சிறுவயல், நற்பணி சோபிதா, பாம்பன். நற்பணி கரோலின் எமிலி. பரமக்குடி.

**குலுக்கல் மூலம் பரிசு பெறுபவர்: நற்பணி சோபிதா, பாம்பன்.**

*அனைவருக்கும் வாழ்த்துகள்.*



# திருவிவிலியமும் திருக்குறளும்

விண்ணகத்தையும், மண்ணகத்தையும் கடல் சூழ்ந்த இந்த உலகத்தையும், அதில் வாழும் அனைத்து உயிரினங்களையும் உண்டாக்கிய ஆண்டவர் இறைவாக்கினர் எசாயா வழியாக இவ்வாறு பேசுகிறார்.

மழையும், பனியும் வானத்திலிருந்து இறங்கி வருகின்றன. அவை நிலத்தை நனைத்து முளை அரும்பி வளரச் செய்து விதைப்பவனுக்கு விதையையும், உண்பவனுக்கு உணவையும் கொடுக்காமல் அங்கு திரும்பிச் செல்வதில்லை. அவ்வாறே என் வாயிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வாக்கும் இருக்கும். அது என் விருப்பத்தை செயல்படுத்தி எதற்காக அதை நான் அனுப்பினேனோ அதை வெற்றிகரமாக நிறைவேற்றாமல் வெறுமையாய் என்னிடம் திரும்பி வருவதில்லை. (எசா 55 :10, 11)

மேற்கூறிய இறை வார்த்தைகளின் ஒப்பற்ற கருத்திற்கிணங்க வள்ளுவர் தனது வான் சிறப்பு 12-ஆவது குறளில்

'துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை'

என்று வெளிப்படுத்துகிறார். யாருக்கு உணவுப் பொருட்களை விளைவித்து தர மழை பயன்படுகிறதோ அவர்களுக்கே அந்த மழை அவர்கள் உண்ணும் உணவாக மாறி அரிய தியாகத்தைச் செய்கிறது என்று கூறுகிறார்.

இக்கருத்திற்கு மேல் வரிச்சட்டமாக ஆண்டவரின் பேரிரக்கத்தின் மூலம் மழையை நல்லோர் மேலும் தீயோர் மேலும் பொழியச் செய்கின்றார். மேலும் 'நான் கொடுக்கும் தண்ணீரை குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது. நான் கொடுக்கும் தண்ணீர் அதை குடிப்பவருக்குள் பொங்கி எழும் ஊற்றாக மாறி நிலை வாழ்வு அளிக்கும்' என்று கூறி இறை வார்த்தையின் மறைபொருளை உணர்த்துகிறார் (யோவா 4:14).

எனவே நாமும் இறைவார்த்தையின் பயனைத்துய்த்து இறை வார்த்தை வழி நின்று இறை நம்பிக்கையோடு பயணித்து பிறருக்கு சாட்சியாக வாழ்வோமாக.

- நற்பணி **முத்து ஜூலியானா**, இராம் நகர்.

# தோபேத் (Topheth)

மோலெக்கு சிலைக்கு எவனும் தன் மகனையோ மகளையோ பலியாக்காதவாறு, பென்இன்னோம் பள்ளத்தாக்கிலிருக்கும் தொப்பேத்தையும் மாசுபடுத்தினார் (2 அர 23:10).

தொப்பேத் என்றால் என்ன? என்று அறிய முயற்சிக்கும் போது கிடைத்த தகவல்கள்:

தொப்பேத் என்பது எருசலேமுக்கு அருகில் உள்ள பென்இன்னோம் பள்ளத்தாக்கிலிருக்கும் ஒரு இடமாகும். எபிரேய மொழியில் இதற்கு 'தகனம் செய்யும் இடம்' என்று பொருள். இந்த இடத்தில் பலியான குழந்தைகளின் அழுகுரல் அவர்களின் உறவினர்களுக்கு கேட்கக்கூடாது என்பதற்காக, 'தஃப்' (Toph) எனப்படும் முரசுகள் அடிக்கப்பட்டதாலும் இந்த பெயர் வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

மோலோக் போன்ற புற சமய தெய்வங்களுக்கு இஸ்ரயேலரில் சிலர் தங்கள் வெற்றிக்காகவும் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளவும் தங்கள் ஆண் மற்றும் பெண் குழந்தைகளை பலியாக கொடுக்க இந்த இடத்தை பயன்படுத்தினர். இதைக்குறித்தே உங்கள் கடவுளாகிய ஆண்டவருக்கு அவர்களது முறைப்படி செய்யவேண்டாம். ஏனெனில், ஆண்டவர் வெறுக்கும் எல்லா அருவருப்பானவற்றையும் அவர்களுடைய தெய்வங்களுக்கு அவர்கள் செய்தார்கள். தங்கள் புதல்வரையும், புதல்வியரையும் கூட அவர்களின் தெய்வங்களுக்கென நெருப்பில் சுட்டெரித்தார்கள் (இச 12:31).

சட்டங்கள் கொடுக்கப்பட்டாலும் இஸ்ரயேலரின் அரசர்களான 'ஆகாசு அரசனானபோது அவனுக்கு வயது இருபது. அவன் எருசலேமில் பதினாறு ஆண்டுகள் ஆட்சி செய்தான். அவன் தன் மூதாதையரான தாவீதைப் போல் தன் கடவுளான ஆண்டவர் திருமுன் நேர்மையாக நடந்து கொள்ளவில்லை.

இஸ்ரயேல் அரசர்களின் வழியிலேயே தானும் நடந்து, இஸ்ரயேலரின் பார்வையில் ஆண்டவர் விரட்டியடித்த வேற்றினத்தாரின் அருவருப்பான வழக்கத்தின்படியே தன் மகனைத் தீயிலிட்டுப் பலியாக்கினான் (2 அர 16:2-3).

'மனாசே அரசனானபோது அவனுக்கு வயது பன்னிரண்டு. அவன் ஐம்பத்தைந்து ஆண்டுகள் எருசலேமில் ஆட்சி செய்தான். மேலும், அவன் தன் மகனை நெருப்பில் பலியாக்கினான்; குறி கேட்பதிலும் சகுனம் பார்ப்பதிலும் நம்பிக்கை கொண்டு குறி கூறுபவர்களோடும், சகுனம் பார்ப்பவர்களோடும் தொடர்பு கொண்டு ஆண்டவர் திருமுன் தீயன புரிந்து ஆண்டவருக்குச் சினமூட்டினான் (2 அர 21:1-6).

இவ்வாறு அரசர்களே வழிதவறியபோது யோசியா அரசர் யூதாவை ஆண்டபோது, இந்த வழிபாட்டு முறைகளை ஒழித்துக் கட்ட முயற்சி செய்தார் 'மேலும், மோலெக்கு சிலைக்கு எவனும் தன் மகனையோ மகளையோ பலியாக்காதவாறு, பள்ளத்தாக்கிலிருக்கும் பென்இன்னோம் தொப்பேத்தையும் மாசுபடுத்தினார். (2 அர 23:10)' யோசியா அரசரின் சீர்திருத்தங்களுக்குப் பிறகு, தோபேத் ஒருவிதமான குப்பைக் கிடங்காக மாறியது,எரியும் குப்பைகள், சுத்திகரிக்கப்படாத கழிவுநீர், மற்றும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்ட குற்றவாளிகளின் உடல்களிலிருந்து அழுகும் சதைகள் நிறைந்த ஒரு அருவருப்பான இடமாக அது இருந்தது.

இருந்த போதும் பின்நாட்களில் மக்கள் திரும்ப அதே பாவத்தில் வீழ்ந்தனர். அதனால் கடவுள் எசாயா இறைவாக்கினர் மூலமும், எரேமியா இறைவாக்கினர் மூலமும்

மக்களை எச்சரித்தார். 'கருவாலி மரத் தோப்பிலும், பசுமையான மரம் ஒவ்வொன்றின் கீழும் காமத்தீயால் எரிகிறீர்கள்; பள்ளத்தாக்குகளில், பாறைப் பிளவுகளின் அடிப்புறத்தில், உங்கள் பச்சிளங் குழந்தைகளைக் கொல்கிறீர்கள் (எசா 57:5) என்றும் 'அவர்கள் தங்கள் புதல்வர், புதல்வியரைத் தீயில் சுட்டெரிக்கும்படி பென்இன்னோம் பள்ளத்தாக்கில் உள்ள தோபேத்தில் தொழுகை மேடுகளை எழுப்பினார்கள். இதனை நான் கட்டளையிடவில்லை. இது என் எண்ணத்தில்கூட எழவில்லை(எரே 7:31; 7:32; 19:11) என்றும் இறைவாக்கினர் மூலம் கூறினார், 'ஆண்டவர் கூறுவது: எருசலேமுக்கும் அதில் குடியிருப்போருக்கும் எதிராக இவ்வாறு செய்வேன். அந்நகரைத் தோபேத்தாகவே மாற்றிவிடுவேன் (எரே 19:12; 19:13) என்று கடவுள் எச்சரித்தார். இதனாலேயே அவர்கள் மீண்டும் அடிமையானார்கள் இந்த இடம் தொடர்ந்து எரியும் தீ மற்றும் குப்பைகளைக் கொண்டிருந்ததால், இதன் பெயர் பின்னர் கிரேக்க மொழியில் கெஹென்னா (Gehenna) என்று அழைக்கப்பட்டு, புதிய ஏற்பாட்டில் 'நரகத்தின்' அடையாளமாக மாறியது. நீங்கள் இரு கண்ணுடையவராய் நரகத்தில் ன்அதாவது கெஹென்னாவில் தள்ளப்படுவதைவிட ஒற்றைக் கண்ணராய் இறையாட்சிக்கு உட்படுவது உங்களுக்கு நல்லது என்று இயேசு குறிப்பிட்டதன் பொருள் தெளிவாக விளங்குகிறது (மாற்கு 9:47). இவ்வாறு தோபேத், மனிதனின் சீர்கேட்டையும் கடவுளின் நீதியையும் நமக்கு நினைவூட்டுகிறது.

நற்பணி **ஜஸ்டின்,** பாம்பன்.

## தூய ஆவியார் வெளிப்படுத்தும் உண்மை

உங்களோடு இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தை உங்களுக்கு அருள்வார் (யோவா 15:26).

இயேசு பாடுகள் படும்முன் சீடர்களிடம் தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிற துணையாளர் வருவார். அவரே தந்தையிடமிருந்து வந்து உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் (யோவா 15:26) என்று கூறினார். அவர் இறந்து உயிர்த்தபின் சீடர்கள் மேல் ஊதி தூய ஆவியாரைப் பெற்றுக் கொள்ளளுங்கள் (யோவா 20:22) என்றார். அதே ஆவியாரை நாமும் திருமுழுக்கின் போது பெற்றுக் கொண்டு, உறுதிப் பூசுதல் வழியாக அவரது அருள்பொழிவைப் பெற்றோம். உண்மையை வெளிப்படுத்தி நம்மை முழு உண்மையை நோக்கி வழிநடத்தும் ஆவியார் நமக்குள் உறைவதால் நாம் இறைவனோடு இணைந்திருக்கிறோம். (1 யோவா 4:3) நாம் இறைவனோடு இணைந்திருப்பதன் ஒரே நோக்கம் கனி தந்து சீடராக வாழ்வது (யோவா 15:8) இந்த உண்மையை நோக்கி நம்மை வழிநடத்தும் தூய ஆவியாரின் உடனிருப்பை உணர்ந்து வாழ்வதே கிறிஸ்தவ வாழ்வின் உன்னத நோக்கமாகும். தூய ஆவியாரின் உள்ளிருப்பை அனுபவித்து, அவரால் இயக்கப்படும் உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழ்வோம்.

நற்பணி.**ஜான் போஸ்கோ.**

# சீராய்வு வட்டாரக் கூட்டம்

| நாள் | வட்டாரங்கள் |
|---|---|
| 06.06.2026 | புளியால் வட்டாரம் |
| 07.06.2026 | காளையார்கோவில் வட்டாரம் |
| 13.06.2026 | இராமேஸ்வரம் வட்டாரம் |
| 14.06.2026 | மானாமதுரை வட்டாரம் |
| 20.06.2026 | பாம்பன் வட்டாரம் |
| 21.06.2026 | ஆவுடைப்பொய்கை வட்டாரம் |
| 28.06.2026 | இராமநாதபுரம் வட்டாரம் |

# இது சாத்தியமா ?

ஆண்டவரின் தூதர் பிலிப்பிடம் 'நீ எழுந்து எருசலேமிலிருந்து காசாவுக்கு செல்லும் வழியாக தெற்கு நோக்கிப்போ' என்றார் (திப 8:26).

கிரேக்க மொழிபெயர்ப்பில் தெற்கு நோக்கி என்பதற்கு மதியம் என்ற பொருளும் உண்டு என்று விவிலிய அறிஞர்கள் கூறுகிறார்கள்.

மதியம் எவ்வளவு வெயிலாக இருக்கும்! ஆனால் இந்த கட்டளையைப் பெற்றுக் கொண்ட திருத்தூதர் பிலிப்பு சற்றும் மறுப்பு தெரிவிக்காமலும் தாமதப்படுத்தாமலும் உடனே செய்கிறார். அவ்வாறு பிலிப்பு கீழ்ப்படிந்து ஆண்டவருக்குச் செவிமடுத்ததால் அங்கே அமைச்சர் ஒருவர் திருமுழுக்கு பெறும் நிகழ்வை வாசிக்கிறோம்.

ஆண்டவர் கட்டளை கொடுக்கும்போது அது வெயிலாகவோ மழையாகவோ இருந்தால் நமக்கென்ன? எச்சூழ்நிலையிலும் நமக்குக் கொடுக்கப்பட்ட வேலையை செய்து முடிப்பது தானே கடவுளுக்கு விருப்பமான செயல்!

தவக்காலங்களில் மட்டும் தான் இல்ல சந்திப்புப்பணி என்று எண்ணாமல் மற்ற ஒரு சில வட்டாரங்களில் நடைபெறுவது போல எங்களது வட்டாரத்திலும் எங்களது பங்கின் ஒரு கிளைக்கிராமத்தை தேர்ந்தெடுத்து தொடர் களப்பணிக்காக வாரம் ஒரு முறை இல்ல சந்திப்பைத்தொடங்கியிருக்கிறோம்.

ஆண்டவர் விரும்பும் நற்செய்திப் பணியாகிய இல்ல சந்திப்புப்பணியை வெயிலாய் இருந்தால் என்ன? மழையாய் இருந்தால் என்ன? தவக்காலமாக இருந்தால் என்ன? பொதுக்காலமாக இருந்தால் என்ன? எப்போதும் செய்வது சாத்தியம் தானே!

நற்பணி **J. அருள் இளங்கோ**, இராம்நகர்

# நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

| நாள் | நிகழ்வு | இடம் |
|---|---|---|
| 01.6.26 | நற்பணி ஆரோக்கியமேரி இல்லத் திருமண விழா | சுப்பராயபுரம் |
| 3.6.26 | அருளமுது ஆதாரக்குழு கூடுகை | அமலஅன்னை அமைதியகம், காயாவயல். அருள்சான்று நிலையம், பரமக்குடி |
| 06.6.26 | பரிந்துரை செபம் | திரு இருதய ஆண்டவர் திருத்தலம், இடைக்காட்டூர் |
| 6.6.26 | சீராய்வு தியானக் கூட்டம் | புளியால் வட்டாரம் |
| 7.6.26 | சீராய்வு தியானக் கூட்டம் | காளையார்கோவில் வட்டாரம் |
| 7.6.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | அருள்சான்று நிலையம், பரமக்குடி காளையார்கோவில், புதுக்கோட்டை, கோட்டைக்காடு |
| 13.06.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | புனித குழந்தை தெரசாள் கோவில் தங்கச்சிமடம், திரு இருதய ஆண்டவர் கோவில் மாந்தை |
| 13.6.26 | சீராய்வு தியானக் கூட்டம் | இரமேஸ்வரம் வட்டாரம் |
| 14.6.26 | சீராய்வு தியானக் கூட்டம் | மானாமதுரை வட்டாரம் |
| 14.6.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | இராமநாதபுரம், சிவகங்கை, ஓரியூர். பட்டுக்கோட்டை,புதலூர் |
| 14.6.26 | தொடர்களப்பணி | இராம்நகர்,நானாக்குடி, காரங்காடு, கமுதி கீழஉச்சாணி, செங்குடி, சாயல்குடி பங்குகள் |
| 20.6.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | மங்களபுரம் |
| 20.6.26 | சீராய்வு தியானக் கூட்டம் | பாம்பன் வட்டாரம் |
| 21.6.26 | சீராய்வு தியானக் கூட்டம் | ஆவுடைப்பொய்கை வட்டாரம் |
| 21.6.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | காயாவயல், சாயல்குடி. சி.கே. மங்கலம், அம்மாபேட்டை தஞ்சாவூர் |
| 28.6.26 | சீராய்வு தியானக் கூட்டம் | இராமநாதபுரம் வட்டாரம் |
| 28.6.26 | புதிய பணியாளர்கள் பயிற்சி | திருவாரூர், நமணசமுத்திரம், இராஜசிங்க மங்கலம் |

| நாள் | மையம் | வழிநடத்துபவர்கள் |
|---|---|---|
| 07.06.26 | அருள்சான்று நிலையம் பரமக்குடி | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல்<br>நற்பணி A. அடைக்கலம் |
| 07.06.26 | தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில் | நற்பணி S. சகாயராணி<br>நற்பணி S. ராஜேந்திரன்<br>நற்பணி A. ஆரோக்கியமேரி |
| 13.06.26 | புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம் | நற்பணி J. ரபோக்கா<br>நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி X. லூர்துமேரி |
| 14.06.26 | புனித செபமாலை அன்னை கோவில், இராமநாதபுரம் | நற்பணி J. மேரிபுஷ்பம்<br>நற்பணி A. ஆரோக்கியமேரி<br>நற்பணி J. சார்லஸ் |
| 14.06.26 | வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை | நற்பணி M. சகாயமேரி<br>நற்பணி G. பிரான்சிஸ் சேவியர்<br>நற்பணி M. லூயிஜான்போஸ்கோ |
| 14.06.26 | புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர் | நற்பணி கோ. அம்பிகா எலியாஸ்<br>நற்பணி A. ஜான்சிமேரி<br>நற்பணி S. ஆரோக்கியசாமி<br>நற்பணி இரா. அருள்பிரகாசம் |
| 21.06.26 | அமலஅன்னை அமைதியகம் காயாவயல் | Sr. செலின் பிரபா<br>நற்பணி S. சகாயராணி<br>நற்பணி L. ஆரோக்கியசாமி<br>நற்பணி கோ. அம்பிகா எலியாஸ் |
| 21.06.26 | புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி | நற்பணி GMS. இராணி<br>நற்பணி T. ஸ்டீபன்<br>நற்பணி M. அருள்மரியநாயகம்<br>நற்பணி J. சார்லஸ் |
| 21.06.26 | புனித பேதுரு கோவில் சி.கே. மங்கலம் | நற்பணி A. சகாய தமிழ்செல்வி<br>நற்பணி A. ஜான்சிமேரி<br>நற்பணி X. சகாயலூயிஆரோக்கியசாமி<br>நற்பணி S. இராஜேந்திரன் |
| 28.06.26 | தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம் | நற்பணி A. ஆரோக்கியசாமி(போ.மை)<br>நற்பணி S. தைனஸ்மேரி<br>நற்பணி P. அமலோற்பவஆரோக்கியராணி<br>நற்பணி A. ஜான்சிமேரி |

| நாள் | மையம் | நெறியாளர்கள் |
|---|---|---|
| 07.06.26<br>I | திரு இருதய ஆண்டவர் கோவில், புதுக்கோட்டை | நற்பணி L. ஆரோக்கியசாமி<br>9150579311<br>நற்பணி A. ஆரோக்கியசாமி<br>9843323439 |
| 07.6.26<br>I | புனித சூசையப்பர் கோவில், கோட்டைக்காடு | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>9443157260<br>நற்பணி தை. அமல்ராஜா<br>9443983519 |
| 13.6.26 | திரு இருதய ஆண்டவர் கோவில். மாந்தை | நற்பணி தை. அமல்ராஜா<br>9443983519<br>நற்பணி கோ. அம்பிகா எலியாஸ்<br>9655772927 |
| 14.06.26<br>II | புனித மரியன்னை கோவில் பூதலூர் | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>9843490206<br>நற்பணி S. பால்ராஜ்<br>9789077287 |
| 14.06.26<br>II | உலக இரட்சகர் கோவில் பட்டுக்கோட்டை | நற்பணி S. அந்தோணி பிரகாஷ்<br>9787791869<br>நற்பணி A.R. சூசைராஜ்<br>8248102600 |
| 20.06.26 | லூர்து அன்னை கோவில் மங்களபுரம் | நற்பணி A.R. சூசைராஜ்<br>8248102600<br>நற்பணி A. ஆரோக்கியசாமி<br>978703717 |
| 21.06.26<br>III | திரு இருதய ஆண்டவர் கோவில், தஞ்சாவூர் | நற்பணி J. ஆரோக்கியசாமி<br>9443157260<br>நற்பணி S. அந்தோணி பிரகாஷ்<br>9787791869 |
| 21.06.26<br>III | புனித வளனார் கோவில் அம்மாபேட்டை | நற்பணி M. விசுவாசம்<br>9442758641<br>நற்பணி J. அருள் இளங்கோ<br>9942434307 |
| 28.06.26<br>V | புனித பாத்திமா அன்னை கோவில். திருவாரூர் | நற்பணி S. மோட்ச அலங்காரம்<br>9843490206<br>நற்பணி S. இராஜேந்திரன்<br>9865749356 |
| 28.06.26<br>V | குழந்தை இயேசு கோவில் நமணசமுத்திரம் | நற்பணி GMS. ராணி<br>9655264448<br>நற்பணி S. ஹென்றி |

# புனித தாமஸ் மூர் (ஜூன் 22)



ஒவ்வொரு ஆண்டும் ஜீன் மாதம் 22ஆம் தேதிக்கு பின் வரும் ஞாயிறு ‘பொதுநிலையினர் நாள்‘ என நாம் கொண்டாடி வருகிறோம். ஏனெனில் பொதுநிலையினரின் பாதுகாவலர் புனித தாமஸ் மூர் விழா ஜீன் மாதம் 22ஆம் தேதிகொண்டாடப்படுறது.

கி.பி 1478ஆம் ஆண்டு இலண்டவில் பிறந்தார். ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் படித்தபின் லண்டனில் சட்டம் பயின்றார். இங்கிலாந்து நாட்டின் நிதி அமைச்சரும், காண்டர்பெர்ரி பேராயருக்கும் ஓர் உதவியாளராகப் பணியாற்றினார். விவிலியம் வாசிப்பதில் வல்லவரானார். அவர் துறவியானர், தன்னுடைய தனி ஆன்ம மீட்பை விட பொதுமக்களின் ஆன்ம மீட்பே சிறந்தது என முடிவெடுத்து கி.பி 1504 இங்கிலாந்து பாராளுமன்ற உறுப்பினர் ஆனார். அதன் பிறகு திருமணம் செய்து கொண்டார்.

ரிச்சர்டு மன்னனின் வாழ்க்கையை ஒரு புத்தகமாக எழுதினார். இந்த புத்தகம் ஷேக்ஸ்பியரை வெகுவாக கவர்ந்தது. கி.பி 1576ல் பொதுவுடைமைக் கொள்கை மையமாக வைத்து எல்லாருக்கும் எல்லாமுமாக‘ என்ற கருத்தின் அடிப்படையில் ‘உட்டோப்பியா‘ எனும் புத்தகம் எழுதினார். தன்னலம் மற்றும் பேராசை மிகுந்த ஐரோப்பாவின் கொடுமைகளைக் கண்டு மனமுருகினார்.

இதுவரை கட்டுப்பாட்டுடனும் கண்ணியத்துடனும், நாட்டையும் திருஅவையையும் பேணிப்பாதுகாத்து வந்த தாமஸ் மூர் அவர்களுக்கு சோதனை காலம் வந்தது. ஹென்றி மன்னருக்கு ஆண் வாரிசு இல்லததால் மனைவி கத்தரீன் அவர்களை மணவிலக்கு செய்ய ஏற்பாடு செய்தார். தன்னுடைய விருப்பம் நிறைவேற மார்ட்டின் லூதர் போதனைகளை தனக்கு சாதகமாக அமைத்துக் கொண்டார். அரசனின் மணமுறிவு ஒப்பந்தத்தில் நிதி அமைச்சர் எனும் முறையில் தாமஸ் மூர் கையெழுத்திட மறுத்தார். கி.பி 1532ல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை துறந்தார் கோபம் கொண்ட ஹென்றி தேசத்துரோகியாக குற்றம்சாட்டி அவரை 17.4.1534 அன்று தலை வெட்டச் செயதார்.

இந்த மறைசாட்சியின் கடைசி வார்த்தை ‘மன்னருக்கு நல்ல பணியாள். ஆனால் கடவுளின் திருமுன்னிலையில் முதலாள்’. கி.பி 1888 ஆம் ஆண்டு அருளாளர் பட்டம் வழங்கப்பட்டது. கி.பி 1935 ஆம் ஆண்டு புனிதராக உயரத்தப்பட்ட இவர். ‘சீர்திருத்த மறைச்சாட்சி’ என அழைக்கப்படுகிறார்.

உண்மைக்காய் எதையும் இழக்கத் தயாராவோம்.

நற்பணி **வே. செங்கோல்மேரி,** காளையார்கோவில்.




கடந்த பகுதியில் ஆலோசனைத் துறையில் (Counselling) மிக முக்கியமான மற்றும் நுட்பமான ஒரு திறன் எதிர்கொள்ளுதல்‘ (Confrontation) பற்றி பார்த்தோம். இப்பகுதியில் நிஜவாழ்க்கைச் சூழல்களில் (Real-life Scenarios), ஆலோசனை அமர்வில் ‘எதிர்கொள்ளுதல்‘ (Confrontation) திறனை எப்படிக் கையாளலாம் என்பதற்கான சில பொருத்தமான உதாரணங்களை பார்ப்போம்.

**‘எதிர்கொள்ளுதல் நுட்பங்கள்:**

நிஜவாழ்க்கைச் சூழல்களை விளக்கும்போது கீழ்க்கண்ட முறையைப் பயன்படுத்தலாம்:

1. கவனித்தல் (Observation): நபர் சொல்வதையும் செய்வதையும் உற்று நோக்குதல்.
2. சுட்டிக்காட்டுதல் (Pointing out): முரண்பாட்டை மென்மையாக விவரித்தல்.
3. விளைவை விளக்குதல் (Explaining Impact): அந்த முரண்பாட்டால் அவர்களுக்கு ஏற்படும் பாதிப்பை உணரச் செய்தல்.

**எதிர்கொள்ளுதல் திறனை விளக்கும் சிறு கதைகள்:**

**கதை 1: செயலுக்கும் சொல்லுக்கும் உள்ள முரண்பாடு**

ராமு ஒரு மதுப்பழக்கத்திற்கு அடிமையானவர். அவர் ஆலோசகரிடம் (Counsellor) வரும்போது, 'நான் என் மகளை உலகத்திலேயே உயிருக்கு மேலாக நேசிக்கிறேன். அவளுக்காக எதை வேண்டுமானாலும் செய்வேன் என்று உருக்கமாகக் கூறுகிறார்.

ஆனால், அதே சமயம் அவர் தனது மகளின் படிப்புச் செலவிற்காக வைத்திருந்த பணத்தை மது குடிக்கப் பயன்படுத்தியதையும் ஒப்புக்கொள்கிறார்.

இங்கே ஆலோசகர் எதிர்கொள்ளுதல் திறனைப் பயன்படுத்துகிறார்:

ராமு, நீங்கள் உங்கள் மகளை மிக அதிகமாக நேசிப்பதாகக் கூறுகிறீர்கள். ஆனால், அவளுடைய எதிர்காலத்திற்காகச் சேர்த்த பணத்தை உங்கள்

பழக்கத்திற்காகச் செலவழித்திருக்கிறீர்கள். உங்கள் அன்பிற்கும் உங்கள் செயலுக்கும் இடையே ஒரு பெரிய இடைவெளி இருப்பதை நீங்கள் கவனிக்கிறீர்களா?

இந்தக் கேள்வி ராமுவை ஆழமாகச் சிந்திக்க வைத்து, தனது தவறை உணரச் செய்கிறது. இதுதான் ஆரோக்கியமான எதிர்கொள்ளுதல்.

**கதை 2: உடல் மொழிக்கும் வார்த்தைக்கும் உள்ள முரண்பாடு:**

நித்யா என்ற பெண்மணி தனது அலுவலகப் பிரச்சனையைப் பற்றிப் பேசுகிறார். 'என் மேலாளர் என்னைத் திட்டியது பற்றி எனக்கு எந்தக் கவலையும் இல்லை. நான் மிகவும் அமைதியாகவே இருக்கிறேன்' என்று கூறுகிறார்.

ஆனால், அவர் இதைக் கூறும்போது அவர் கைகள் நடுங்குகின்றன. கண்கள் சிவந்து கண்ணீர் முட்டுகிறது.

ஆலோசகர் இதைக் கவனித்து மென்மையாகக் கூறுகிறார்:

'நித்யா, உங்களுக்குக் கவலை இல்லை என்று வார்த்தைகளால் சொல்கிறீர்கள். ஆனால், உங்கள் கைகள் நடுங்குவதையும், உங்கள் கண்கள் கலங்கியிருப்பதையும் என்னால் பார்க்க முடிகிறது. உள்ளுக்குள் நீங்கள் ஏதோ ஒரு வலியை மறைக்க முயற்சி செய்கிறீர்களோ எனத் தோன்றுகிறது:

நித்யா உடனே உடைந்து அழுது, தனது உண்மையான வருத்தத்தைப் பகிர்ந்துகொள்கிறார். இங்கே 'எதிர்கொள்ளுதல் என்பது ஒருவரை உண்மையை நோக்கித் திறக்கும் திறவுகோலாகச் செயல்படுகிறது.

எதிர்கொள்ளுதல் திறனை விளக்கும் நிஜவாழ்க்கைச் சூழல்: (Real-life Scenarios)

**1. கணவன் மனைவி இடையிலான சூழல் (குடும்ப ஆலோசனை)**

**சூழல்:** கணவர் தனது மனைவியிடம் எப்போதும் அன்பாகவே நடப்பதாகக் கூறுகிறார். ஆனால், ஆலோசனை அமர்வின் போது மனைவி பேசும் ஒவ்வொரு முறையும் அவர் குறுக்கிட்டு அவரை மிரட்டும் தொனியில் பேசுகிறார்.

**ஆலோசகரின் எதிர்கொள்ளுதல்:**

மீநீங்கள் உங்கள் மனைவியை மிகவும் மதிக்கிறீர்கள் என்று என்னிடம் சொன்னீர்கள். ஆனால், கடந்த பத்து நிமிடங்களில் அவர் பேசத் தொடங்கும் போதெல்லாம் நீங்கள் குறுக்கிட்டு அவரைப் பேசவிடாமல் தடுத்ததை கவனித்தீர்களா? உங்கள் அன்பான சொல்லுக்கும் இந்தச் செயலுக்கும் இடையில் ஒரு முரண்பாடு இருப்பதை நீங்கள் உணர்கிறீர்களா?'

**2. மாணவர் மற்றும் ஆசிரியர்/ஆலோசகர் சூழல் (கல்வி ஆலோசனை)**

**சூழல்:** ஒரு மாணவர் தனக்குத் தேர்வில் நல்ல மதிப்பெண் எடுக்க வேண்டும் என்ற தீராத ஆசை இருப்பதாகக் கூறுகிறார். ஆனால், அவர் வகுப்புகளுக்குத் தொடர்ந்து தாமதமாக வருவதுடன், வீட்டுப்பாடங்களையும் முடிப்பதில்லை.

ஆலோசகரின் எதிர்கொள்ளுதல்: உங்களுக்குப் படிப்பில் பெரிய இலக்குகள் இருப்பதாகச் சொல்கிறீர்கள், அது மகிழ்ச்சி. அதே சமயம், உங்கள் வருகைப் பதிவேடு (Attendance) மற்றும் முடிக்கப்படாத பாடங்கள் வேறு ஒரு கதையைச் சொல்கின்றன. உங்கள் இலக்கை அடைய உங்கள் தற்போதைய செயல்பாடுகள் தடையாக இருக்கின்றன என்பதை நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா?'

3. **பணியிடச் சூழல் (தொழில்முறை ஆலோசனை)**

**சூழல்:**ஒரு ஊழியர் தனது சக பணியாளர்கள் அனைவரும் தன்னைத் தள்ளி வைப்பதாகப் புகார் கூறுகிறார். ஆனால், அவரே மற்றவர்களுடன் மதிய உணவு உண்ண மறுப்பதையும், குழு விவாதங்களில் கலந்து கொள்ளாமல் இருப்பதையும் ஆலோசகர் அறிகிறார்.

**ஆலோசகரின் எதிர்கொள்ளுதல்:**

'மற்றவர்கள் உங்களைத் தனிமைப்படுத்துவதாக நீங்கள் உணர்கிறீர்கள். ஆனால், நீங்களே மற்றவர்கள் உங்களை நெருங்க முடியாதபடி ஒரு சுவரை எழுப்பிக் கொண்டிருப்பது போல எனக்குத் தோன்றுகிறது. மற்றவர்கள் உங்களை அழைக்க வரும்போது நீங்கள் அதைத் தவிர்ப்பது ஏன் என்று யோசித்தது உண்டா?

**4. போதைப் பழக்கம் தொடர்பான சூழல் (மீட்பு ஆலோசனை)**

**சூழல்:** ஒருவர் தான் மதுப்பழக்கத்தைக் கைவிட்டுவிட்டதாகக் கூறுகிறார். ஆனால், அவர் பேசும் போது உடலில் நடுக்கம் இருப்பதையும், அவர் கண்கள் எதையோ மறைக்க முயல்வதையும் ஆலோசகர் பார்க்கிறார்.

**ஆலோசகரின் எதிர்கொள்ளுதல்:**

நீங்கள் மதுவை நிறுத்திவிட்டதாகச் சொல்வதை நான் நம்ப விரும்புகிறேன். ஆனால், உங்கள் உடல் மொழியும் பதற்றமும் ஏதோ ஒரு உண்மையை என்னிடம் சொல்லத் தயங்குவது போல் காட்டுகிறது. நாம் நேர்மையாகப் பேசினால் மட்டுமே என்னால் உங்களுக்கு உதவ முடியும். இப்போது சொல்லுங்கள், உண்மையில் என்ன நடக்கிறது?

**பொருத்தமான சில நேரடி உதாரணங்கள்** (Quick Examples):

**1. கடந்த காலத்திற்கும் நிகழ்காலத்திற்கும் முரண்பாடு:** கடந்த வாரம் "நான் இந்த வேலையைச் செய்யத் தயார்' என்று தன்னம்பிக்கையுடன் சொன்னீர்கள்,ஆனால் இன்று என்னால் முடியாது என்று பின்வாங்குகிறீர்கள். இந்த மாற்றத்திற்கு என்ன காரணம்?'

**2. தற்காப்பு மனப்பான்மையைச் சுட்டிக்காட்டுதல்:** 'மற்றவர்கள் உங்களைக் குறை சொல்வதாக நீங்கள் வருத்தப்படுகிறீர்கள். ஆனால், நீங்கள் மற்றவர்களிடம் பேசும் கோபமான தொனிதான் இதற்குக் காரணமாக இருக்குமோ என்று எப்போதாவது யோசித்தது உண்டா? முன்னுக்குப் பின் முரணான தகவல்: 'ஆரம்பத்தில் உங்கள்

நண்பர்தான் உங்களுக்கு உதவினார் என்று சொன்னீர்கள், இப்போது அவர்தான் உங்கள் பிரச்சனைக்குக் காரணம் என்கிறீர்கள். இதில் எது உண்மை?

கடந்த இரண்டு பகுதிகளில் எதிர்கொள்ளுதல்' என்ற நுண்திறன் பற்றி தெளிவாக உதாரணங்களோடு நிஜ சூழ்நிலைகளோடு பார்த்தோம் அடுத்து வரும் பகுதியில் கவனம் செலுத்துதல்' என்ற நுண்திறன் பற்றி பார்ப்போம்.

**அசை போட அரை நிமிடம் :**

'ஆற்றுப்படுத்துதலில் முரண்பாடுகளை முன்னேற்ற பாதையாக மாற்ற 'எதிர்கொள்ளுதல்' என்ற ஒரு திறன் உதவுகிறது'

சகோ. S.**ஜான் ஜோ பிரபாகர்.** SHJ.

மனநல ஆற்றுபடுத்துநர், பரமக்குடி.

# என்னை மன்னியும்

✹ மனிதர் செய்யும் தர்மங்கள் அவருக்கு கணையாழி போல் திகழ்கின்றன, என்பதை அறிந்தும் தேவையிலுள்ளோர்க்கு உதவிட மறந்த தருணங்களை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (சீராக் 17:22).

✹ தூய ஆவியாராம் துணையாளர் உங்களுக்கு அனைத்தையும் கற்றுத்தருவார் என்பதை அறிந்தும் தூய ஆவியானவரின் துணையை நாடாமல் அவருக்கு வருத்தம் உண்டாக்கும் விதமாய் மனம் போன போக்கில் வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (சீராக் 14:26).

✹ உன்மீது நீ அன்பு கூர்வதுபோல உனக்கு அடுத்திருப்பவர்கள் மீதும் அன்பு கூர்வாயாக என்ற மேலான கட்டளையை மறந்து பிறருக்குத் தீங்கிழைத்து நன்மை செய்ய மறந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (கலா 5:14).

✹ நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம். கடவுளிடம் நம்பிக்கை கொள்ளுங்கள் என்பதை மறந்து, துன்ப வேளையில் உள்ளச் சோர்வுற்று கடவுளை நம்பாமல். பிற தெய்வ சடங்குகளில் ஈடுபாடு கொண்டு வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன். இறைவா! என்னை மன்னியும் (யோவா 14:1).

நற்பணி S.P. **சவரிமுத்து**, இராம்நகர்

# செப வீரர்களுக்கு

**இம்மாத செபக் கருத்து**

- ⊙ விளையாட்டுப் போட்டிகள் நாடுகள் மற்றும் குழுக்களுக்கிடையே அமைதியையும், நல்லெண்ணத்தையும் உருவாக்கும் கருவிகளாகிவிட
- ⊙ புதிய கல்வியாண்டைத் துவங்கும் மாணவ, மாணவியருக்காக
- ⊙ போர் நடைபெறும் இடங்களில் அமைதி நிலவவும், மக்கள் பாதுகாப்புடன் வாழவும்
- ⊙ தமிழகத்தில் அமைந்துள்ள புதிய அரசு மக்களின் நலனைப் பேணும் அரசாகப் பணியாற்ற
- ⊙ இந்தியாவின் மதச் சார்ப்பின்மையும், சனநாயகமும் முழுமையாகப் பாதுகாக்கப்படவும், அதற்கு எதிராகச் செயல்படும் தீய சக்திகள் அழிக்கப்படவும்.

**விரும்பத்தக்க செயல்பாடு:**

➤ கிறிஸ்து மைய வாழ்விலிருந்து நம்மைப் பிரிக்கும் தவறான பக்தி முயற்சிகள் மற்றும் மூடப்பழக்க வழக்கங்களில் ஈடுபடாமல் ஒதுங்குதல்.



வட்டாரக் கண்காணிப்பாளர் பயிற்சி- தஞ்சாவூர்



விவிலியப் பயிற்சி - திண்டிவனம்



அருளமுது ஆதாரக்குழுக் கூடுகை
அருள்சான்று நிலையம்





முத்திரை
தூயஆவியார் பெருவிழா திருவிழிப்பு

படங்களைத் கொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **சீராக் 2,3,4 அதிகாரங்களுக்குள்**
















## முத்திரை
## தூயஆவியார் பெருவிழா திருவிழிப்பு








**Narseithi Paniyalar**
is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram,
Paramakudi - 623 707, Ramnad Dist.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com